**இலங்கை இராணுவம்/இலங்கை பந்தய வாகன ஓட்டுனர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் சங்கம்**
**பத்திரிகை வெளியீடு - Commando Challenge Supercross 2017**

---

## Commando Challenge Supercross வாகன ஓட்டுனர்களையும், மோட்டார் சைக்கிள் ஓட்டிகளையும் வேகத்தின் உச்ச எல்லைக்கு இட்டுச்செல்லவுள்ளது

*வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் சர்வதேசத் தரத்திலான பந்தயத் திடல் அமைக்கப்பட்டுள்ளது*

இலங்கை இராணுவத்தின் கொமாண்டோ படைப்பிரிவு, இலங்கை பந்தய வாகன ஓட்டுனர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் சங்கம் மற்றும் CEAT Sri Lanka நிறுவனம் ஆகியவற்றுடன் இணைந்து ஏற்பாடு செய்துள்ள மோட்டார் கார் மற்றும் மோட்டார் சைக்கிள் பந்தய நிகழ்வான Commando Challenge Supercross 2017, எதிர்வரும் ஜுலை 16 ஆம் திகதியன்று இடம்பெறவுள்ளது.

உள்நாட்டு பந்தய வரலாற்றில் மிகவும் நீளமான, விசாலமான மற்றும் வேகமான பந்தயத் திடல்களுள் ஒன்றாக அமைந்துள்ள, சர்வதேச தரம் கொண்ட பந்தயத்திடல் ஒன்றில் தனித்துவமாக இந்த supercross பந்தயம் இடம்பெறவுள்ளது. இந்த ஆண்டில் "Commando Lap" என்ற பெயரிடப்பட்ட "Jocker Lap" உடன் முதன்முறையாக சர்வதேச தரத்திலான பந்தயத்திடல், கார் மற்றும் மோட்டார் சைக்கிள் பந்தயங்களுக்காக Supercross பந்தயத்தில் இடம்பெறவுள்ளது. ஊவா, குடா ஓயாவிலுள்ள கொமாண்டோ படைப் பிரிவு பயிற்சிக் கல்லூரியில் அமைந்துள்ள இந்த பந்தயத்திடல், துட்டகெமுனு மன்னன் தனது வீரர்களுக்கு பயிற்சியளித்தான் என்ற நம்பப்படுகின்ற பிரதான மைதானம் அமைந்துள்ள பலஹுருவ என்ற வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. 1.9 கிலோ மீட்டர் நீளம் கொண்ட கார்ப் பந்தயத் திடல் மற்றும் 1.6 கிலோ மீட்டர் நீளம் கொண்ட மோட்டார் சைக்கிள் பந்தயத்திடல் ஆகிய இரண்டும், இலங்கை பந்தய வாகன ஓட்டுனர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் சங்கத்தின் தொழில்நுட்ப உதவியுடனும், தொழில்ரீதியான மேற்பார்வையின் கீழும் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தமாக 12 கார்ப் பந்தயங்களும், 10 மோட்டார் சைக்கிள் பந்தயங்களும் இடம்பெறவுள்ளதுடன், நாட்டிலுள்ள மிகவும் திறமையான வாகன ஓட்டுனர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகளின் திறமைகளை எடை போடவுள்ளதுடன், புத்தம்புதிய பந்தயத்திடலில் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக போட்டியாளர்களுடன் மோதவுள்ள நாட்டின் மிகவும் மயிர்கூச்செறியும் நிகழ்வுகளில் ஒன்றான இதனை பெருந்திரளான பார்வையாளர்கள் நேரடியாக கண்டுகளிக்கவும் வாய்ப்புக் கிட்டியுள்ளது.

இதனை அறிவிக்கும் நிகழ்வில் கொமாண்டோ படைப் பிரிவின் படைத்தளபதியான மேஜர் ஜெனரல் ரல்ஃப் நுகேரா அவர்கள் விளக்கமளிக்கையில், "Commando Challenge Supercross பந்தயத்தின் 2017 ஆம் ஆண்டு நிகழ்வானது, ஓட்டுனர்கள் மற்றும் ஓட்டிகளுக்கு தனித்துவமான அனுபவத்தை வழங்கவுள்ளது மட்டுமன்றி, நிகழ்வில் கலந்து கொள்வர் என எதிர்பார்க்கப்படுகின்ற பெருமளவான பார்வையாளர்களுக்கும் தனித்துவமான ஒரு அனுபவத்தை வழங்கவுள்ளது. இரு பந்தயத் திடல்களும் சர்வதேச தரத்தில் வடிவமைக்கப்பட்டுள்ளதுடன், இத்துறையில் அனுபவத்தைக் கொண்டுள்ள நிபுணர்களின் அறிவுடனும், ஆலோசனையுடனும் தயாரிக்கப்பட்டுள்ளது. துட்டகெமுனு மன்னன் மற்றும் அவனது வீர யுகத்தினை எமக்கு நினைவூட்டுகின்ற வகையில், நாட்டில் வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தில் இந்தப் பந்தயத்திடல் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. அந்த வீர உணர்வானது தாங்களே சிறந்தவர்கள் என்பதை நிரூபிப்பதற்காக கடுமையாக போட்டியிடவுள்ள ஓட்டுனர்கள் மற்றும் ஓட்டிகளுக்கிடையில் அவர்களின் வீரத்திற்கு சவால் விடும் என்று நாம் நம்புகின்றோம்," என்று குறிப்பிட்டார்.

இலங்கை பந்தய வாகன ஓட்டுனர்கள் மற்றும் மோட்டார் சைக்கிள் ஓட்டிகள் சங்கத்தின் தலைவரான நிஷான் வாசலதந்திரி அவர்கள் இந்த நிகழ்வில் உரையாற்றுகையில், "மீண்டும் ஒரு ஆண்டில் தனித்துவமான இந்த நிகழ்விற்கு கொமாண்டோ இராணுவப் பிரிவுடன் இணைந்துள்ளமை எமக்கு மிகவும் மகிழ்ச்சியளிக்கின்றது. கடந்த ஆண்டில் வெற்றிகரமாக இந்நிகழ்வு இடம்பெற்றமையைத் தொடர்ந்து, இலங்கையிலுள்ள பந்தய ரசிகர்களுக்கு சற்று வித்தியாசமான ஒரு அனுபவத்தை வழங்குவதற்காக மீண்டும் ஒரு முறை நாம் கைகோர்த்துள்ளோம். மிகவும் திறமைமிக்க எமது ஓட்டுனர்கள் மற்றும் ஓட்டிகள் தமது திறமைகளைக் காண்பித்து, சர்வதேச தரத்திற்கு ஈடான பந்தயத்திடலில் பெறுமதிமிக்க அனுபவத்தைப் பெற்றுக்கொள்வதற்கு இது மிகச் சிறந்த ஒரு களமாக அமையவுள்ளது. அவர்கள் வெற்றிபெறுவதற்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், மயிர்கூச்செறியும் அனுபவத்தை வழங்கவுள்ள இத்தினத்தை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்துள்ளோம்," என்று குறிப்பிட்டார். அவர் தொடர்ந்தும் கூறுகையில், "Abaya & Co நிறுவனத்தின் வலுவூட்டலுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ள Sri Lanka Super Series 2017, தொடர் நிகழ்வில் Commando Challenge Supercross மிகவும் முக்கியமான நிகழ்வாக மாறியுள்ளதுடன், வெற்றிபெறும் பந்தய ஓட்டுனருக்கு Vision Care (Pvt) Ltd நிறுவனத்தின் அனுசரனையுடனும், KIA Motors Lanka Limited நிறுவனத்தின் இணை அனுசரணையுடனும், புத்தம்புதிய KIA Picanto கார் ஒன்று பரிசாக வழங்கப்படவுள்ளதை மிகவும் பெருமையுடன் அறியத்தருகின்றோம். வெற்றிபெறும் பந்தய ஓட்டிக்கு Stafford Motors (Pvt) Ltd நிறுவனத்தின் அனுசரனையுடன் புத்தம்புதிய Honda Hornet மோட்டார் சைக்கிள் ஒன்றும் பரிசாக வழங்கப்படவுள்ளது. 2017 டிசம்பர் 2 ஆம் திகதியன்று இரத்மலானை Eagles Lake Side மண்டபத்தில் இடம்பெறவுள்ள பரிசளிப்பு வைபவத்தில் இப்பரிசுகள் வழங்கப்படவுள்ளன," என்று குறிப்பிட்டார்.

- முற்றும் -